மரியாவின்

# அழகு தமிழ்

3

Double click to zoom

திருமதி. தேவிகா கோபாலகிருஷ்ணன்
எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எட்.,

Maria

# பொருளடக்கம்


1. இயற்கையை வணங்குவோம்! (பாடல்) ............ 5
2. செயல்பாடு ............ 6
3. அழகிய சிற்றூர் ............ 7
4. தமிழ் எழுத்துகளை நினைவுபடுத்திக் கொள்வோம்! ............ 9
5. நண்பனைத் தேடி ............ 11
6. உயிர்மெய் எழுத்து அட்டவணை ............ 15
7. உயிர்மெய் எழுத்துகள் ............ 16
8. மிருகக்காட்சி சாலை (பாடல்) ............ 18
9. செயல்பாடு ............ 19
10. புதிய ஆத்திசூடி ............ 21
11. ஊர் சுற்றலாம் வாங்க! ............ 22
12. செய்திகள் அறிவோமா! (உரைநடை) ............ 25
13. செயல்பாடு ............ 28
14. எழுத்துகளின் ஓசை ............ 29
15. வாழ விடு! வாழு (நாடகம்) ............ 30
16. செயல்பாடு ............ 33
17. இன்பத் தமிழ் (பாடல்) ............ 34
18. செயல்பாடு ............ 35
19. மாற்றங்களைக் கண்டுபிடிங்க! ............ 36
20. கூடி மகிழ்வோம்! ............ 37
21. செயல்பாடு ............ 41
22. சட்டை போட்ட குரங்கு (பாடல்) ............ 42
23. பொருள் உணர்ந்து படிப்போம்! ............ 43
24. திருக்குறள் ............ 44
25. காண்போம்! கற்போம்! (உரைநடை) ............ 46
26. கீரை விதைப்போம்! (பாடல்) ............ 51
27. இனியவை கூறல் வேண்டும் (உரைநடை) ............ 53
28. உலக நீதி (பாடல்) ............ 55
29. இப்படி நடந்தால்? (உரைநடை) ............ 56
30. செயல்பாடு ............ 59
31. ஆடும் மயில் (பாடல்) ............ 60
32. பாரம்பரியத்தின் பெருமை ............ 62
33. கொடி காத்த குமரன் (உரைநடை) ............ 64
34. செயல்பாடு ............ 66
35. மைனாவும் முயலும்! (கதை) ............ 68
36. வேறுபாடு அறிவோம்! ............ 72
37. மூதுரை (பாடல்) ............ 73
38. சுத்தமான உப்பு வேண்டும் (கதை) ............ 74
39. அடுக்குத் தொடர் மற்றும் இரட்டைக்கிளவி அறிவோம்! ............ 77
40. சிறுவர் இதழ் தயாரிப்போம்! ............ 79
41. செயல்பாடு ............ 86
42. சர்க்கரை மண்ணானது (நாடகம்) ............ 87
43. சொல்லின் வகைகளை அறிந்து கொள்வோம்! ............ 90
44. நீதிநெறி விளக்கம் (பாடல்) ............ 92


# 1. இயற்கையை வணங்குவோம்!

## மழை

புவனத்தில் விழுந்த மழைத்துளியே!
வாழ்க்கையை விதைத்த உயிர்த்துளியே!
கார்மேகமாய் காற்றில் உலவுகின்றாய்!
மின்னல் வெடிக்கவே வெளிவருவாய்!
அழகிய தூறலாய் நிலத்தினிலே
மண்வாசம் வெளிவர பரவுகின்றாய்!
பள்ளம் மேடு பார்க்காமல்
பாய்ந்து பாய்ந்து ஓடுகின்றாய்!
பரந்த வெளியினில் பாய்ந்ததுமே – அங்கு
பசுமைப் புல்லை விளைக்கின்றாய்!
மனித உயிர்களைக் காக்கும் உன்னை
மனம் குளிர்ந்திடப் போற்றுகிறோம்!
பயிர் பச்சை செழித்திடப் பாயும் உன்னை
மகிழ்ந்து போற்றி வணங்குகிறோம்!



– தேவிகா கோபாலகிருஷ்ணன்

### அருஞ்சொற்பொருள்

புவனம் – உலகம்
உலவுகின்றாய் – சுற்றுகின்றாய்
கார்மேகமாய் – மழை மேகமாய்
தூறல் – சிறிய மழைத்துளி



# 4. தமிழ் எழுத்துகளை நினைவுபடுத்திக் கொள்வோம்!

| | | |
|---|---|---|
| உயிரெழுத்துகள் | – | 12 |
| மெய்யெழுத்துகள் | – | 18 |
| உயிர்மெய்யெழுத்துகள் | – | 216 |
| ஆய்தம் | – | 1 |
| மொத்தம் | | 247 |

(அ) கீழ்க்காணும் சொற்களின் முதல் எழுத்தை மாற்றிப் புதிய சொற்களை உருவாக்குக.

எடுத்துக்காட்டு :

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஆட்டம் | கட்டம் | வட்டம் | சட்டம் |
| 2. | திடல் | ______ | ______ | ______ |
| 3. | போட்டி | ______ | ______ | ______ |
| 4. | வால் | ______ | ______ | ______ |

(ஆ) உயிரெழுத்துச் சொற்களை வரிசையாக அமைக்க.

ஔவை, இரண்டு, எருது, உள்ளம், அரசர், ஈட்டி,
ஐயம், ஆடல், ஊசி, ஒட்டகம், ஓணான், ஏடு

| | | | |
|---|---|---|---|
| ______ | ______ | ______ | ______ |
| ______ | ______ | ______ | ______ |
| ______ | ______ | ______ | ______ |

(இ) உயிரெழுத்து இடம் பெற்ற சொல்லை அடிக்கோடிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பாடல் | பம்பரம் | ஆறு | கழுகு |
| 2. | நண்பன் | ஈட்டி | முல்லை | விளையாட்டு |
| 3. | சிங்கம் | காகம் | உறவு | குரங்கு |

விளையாடலாம் வாங்க!

**ஆசிரியருக்கு**




- மாணவர்களை வட்டமாக உட்கார வைக்கவும்.
- அனைவரிடமும் ஒரு துண்டுக்காகிதத்தைக் கொடுத்து அதில் அவரவர் பெயரினை எழுதச் சொல்லவும்.
- எழுதிய பெயர்களை எல்லாம் ஒரு பெட்டியில் சேகரிக்கவும்.
- அந்தப் பெட்டியில் உள்ள பெயர் எழுதப்பட்ட காகிதத்தை வெவ்வேறு மாணவர்களிடம் கொடுக்கவும்.
- ஒரு மாணவனை எழுப்பி அந்தக் காகிதத்தில் இருக்கும் பெயரினை வாசிக்கச் சொல்லி அதன்பின் அந்த மாணவனைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் பேசச் சொல்லவும்.
- இப்படியாக ஒவ்வொருவராகப் பேசச் சொல்லவும்.



# 5. நண்பனைத் தேடி...

வரிசைப்படுத்திப் படிக்கவும்.




7
என்னையே அலைக்கழிக்கும் காற்றிடம் போய்க் கேள்!
8
காற்றே! காற்றே! நீ எனக்கு நண்பன் ஆவாயா? சொல்!
9
என்னால் ஓரிடத்தில் நிலையாக இருக்க முடியாதே!
10
அப்படின்னா நான் பூனையிடம் அகப்பட்டுச் சாக வேண்டியது தானா?
11
அழாதே! எலியே! என்னையே தடுத்து நிறுத்தும் மலையிடம் போ...
12
மலையே! மலையே! நீ எனக்கு நண்பனாக இருப்பாயா? சொல்!


13
நீயாவது பூனையிடமிருந்து என்னைக் காப்பாற்று!
14
நண்பனாக இருக்க விருப்பந்தான். ஆனால் உன்னோடு ஓடி விளையாட என்னால் முடியாதே!
15
என்னையே அரித்துச் செல்லும் ஆற்றிடம் போ!
16
ஆறே! ஆறே! உன்னிடம் நட்புக் கொள்ள விரும்புகிறேன்.
17
நான் உன்னோடு குதித்து விளையாட வருவேன். ஆனால் நீ என்னுள் மூழ்கி இறந்து விடுவாய்!









வினாக்களுக்கு விடையளி.

1. எலி யாரைத் தேடிப்போனது?
2. மேகம் எலியிடம் என்ன சொன்னது?
3. எலியிடம் ஆறு என்ன கூறியது?
4. எலி ஏன் நண்பனைத் தேடிப்போனது?
5. மலை எலியிடம் என்ன சொன்னது?



# 6. உயிர்மெய் எழுத்து அட்டவணை

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |